295

பதிவு எண் — M. 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

MADRAS

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை-4 குருகுலம், மாம்பாக்கம்; கர, மார்கழி; 11—1—52. தளிர்-15

## குருகுலத்தின் குறிக்கோள் :

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது

## உழவுக்கு ஒரு முதல்

ஏரின் ஆட்சியே உலகம் அனைத்தையும் ஆள்கின்றது. மொழி, கலை, நாகரிகம் சாதி, சமயம் ஆகிய பலவேறு திறங்களில் நாடுகள் ஒன்றுக்கொன்று வேறுபாட்டுடன் திகழ்ந்தாலும் அவ்வந்நாடுகளில் மக்கள் வாழ்க்கை பொதுவாக உழவு தொழிலால் உயிர்த்துச் செழிப்படைவதில் எவ்வித வேறுபாடும் காண்பதற்கில்லை. மிகப் பழைய கற்கால முதற்கொண்டே மக்கள் ஏர்த்திறத்தால் நிலத்தில் விளைவுச் செல்வம் கண்டு நுகரும் உணர்வுப் பண்புடன் திகழ்ந்து வருகின்றார்கள். இன்னும் எண்ணிலா ஆயிரமாண்டுகள் சென்றாலும் இந் நிலை மாறாது.

நாடுமலிய மழை பெய்து, ஏரி குளங்கள் நிறைந்தாலன்றி, உழவர் எங்ஙனம் ஏருழுது நிலத்தில் விளைவு காணக் கூடும்? வானத்தினின்று இயல்பில் அமிழ்தம் போன்ற நீர்த்தாரைகள் பொழியாவிடின்' ஏர்வளம் குறைந்து, உலகம் பாழ்வெளியாகி, உயிரினம் யாவும் பசியாற் சாம்பிச் சுருண்டு போதல் ஒருதலை.

விஞ்ஞான நெறியில் விளைவு காண விரையும் நாடுகளில் கூட எங்ஙனமேனும் வானத்தினின்று மழை பெய்யக் காணும் ஆராய்ச்சியில் முனைந்து நிற்கின்றனர்.

ஆகவே, மழையே உழவு தொழிலுக்கு முதன்மையாகிறது.

ஏரி னுழாஅ ருழவர்
புய லென்னும்
வாரி வளங்குன்றிக் கால்.

உழவர் ஏரின் உழார்-உழவர் ஏரான் உழுதலைச் செய்யார்; புயல் என்னும் வாரிவளம் குன்றிக் கால்—மழையென்னும் வருவாய் தன் பயன் குன்றின்.

குன்றியக்கால் என்பது குன்றிக்கால் என்று குறைந்து நின்றது.

உழவர் ஏரால் உழுது உணவினை உண்டு பண்ணுதல் ஆகாதென்றதால், நாட்டில் செழிப்பும் அமைதியும் குன்றி வறுமையும் பசியும் மலிந்து மக்களும் மாக்களும் மாய்ந்தொழிவர் என்பது பெறப் பட்டது. புயல் என்று மட்டும் கூறாது புயல் என்னும் வாரி என்றது அஃது அனைத் துலகத்திற்கும் இன்றியமையாச் செல்வம் என்பது தறிவித்தற் பொருட்டு. மழை பொய்ப்பின் ஏர்த்தொழில் குன்றும் எனவே, அதன் விளைவால் நாட்டில் படிப்படியாகத் தோன்றும் தொழில்கள் யாவும் தோன்றா தொழியும் என்று தெளிவித்தார்.

இக் குறளால் நாடு, நாடாகத் திகழ்வதற்கு மழையே முதற் காரணம் என்று வலியுறுத்தப் பட்டது.

## ,'முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

**4-ம் ஆண்டுக் கையொப்பம்**

**(5-10-51 முதல்)**

| | | |
|---|---|---|
| உள் நாடு | ரூ. | 4 0 0 |
| வெளி நாடு | ரூ. | 6 0 0 |
| தனித் தாள் | | 0 1 0 |

விற்பனையாளர்கள், தேவைக்கு முன்பணத்துடன் எழுதுக.

முகவரி :—

குருகுலம், மாம்பாக்கம்,

மதுராந்தகம் **P. O.**

(தென் இந்தியா)


"யாதும் ஊரே, யாவரும் கேளிர்;
தீதும் நன்றும் பிறர்தர வாரா."
—புறநானூறு.


| கிளை | | தளிர் |
|---|---|---|
| 4 | கர, மார்கழி, 4-11-52 வெள்ளி | 15 |


# பொது வுடைமை?

அரசியல் இன்றைய உலகில் முதன்மை பெற்றிருக்கிறது. பண்டு, மக்களின் வாழ்வியலும், மொழியும், மொழி சார்ந்த நாட்டியலும், அடுத்து மொழியாற் பரவும் கருத்தியல் (கொள்கை) ஆகிய சமயவியலும் முறையே முதன்மையுற்றிருந்தன. இனி வரும் உலகில் தொழிலியல் முதன்மை பெறும் எனத் தோற்றுகின்றது. இன்றைய உலகையும் இனி வரும் உலகையும் இயக்கியும் உருவாக்கியும் வரும் அரசியல் கட்சிகள் பலவற்றுள் பொது உடைமைக் கட்சியும் ஒன்றாகும். "கார்ல் மார்க்ஸ்" எனும் மேலை நாட்டு அறிஞரே இப் பொது வுடைமைக் கொள்கைக்கு (தத்துவத்துக்கு) ஓர் உருவம் கொடுத்தவர் என்று போற்றப்படுகிறார். ரஷ்யாவும் அதைச் சார்ந்த சீனம் முதலிய நாடுகளும் இக் கொள்கையை ஏற்று நடை முறையில் கொண்டு வந்திருக்கின்றன. தாம் தழுவிய இக் கொள்கையை உலக முழுவதும் பரப்ப அவைகள் பல்வேறு வகைகளில் ஒருபால் முயன்று வருகின்றன.

மற்றொருபால் பொதுவுடைமைக் கொள்கை, மக்களின் உள் உணர்ச்சிகளை மாய்ப்பது; அவற்றால் மனித இனம் உண்மையில் முன்னேறாது; ஆகவே மக்களை அவரவர்கள் போக்கில் இயங்க விட்டு, அவர்களிற் பெரும்பாலோருடைய உணர்ச்சிகளுக்கு ஏற்றபடி இயங்கும் மக்களாட்சியையே எங்கும் நிறுவி உலகில் அமைதியையும், அறிவையும் வளத்தையும் நிலை நாட்ட வேண்டும் என்று ஆங்கில அமெரிக்க பிரெஞ்சு நாட்டுத் தலைவர்கள் முயல்கிறார்கள்.

உலக மக்களின் நலனுக்காக இவ்வாறு இரு வேறு வகைகளில் முயலும் நாடுகளுக்குள் ஏற்பட்டுள்ள பிணக்கே இன்றைய உலகை மிகவும் குழப்பத்தில், மருட்சியில் நிறுத்தியிருக்கிறது.

நிற்க, மக்களின் அறியாமை பிணி, பசி, பகை முதலிய எல்லா அல்லல்களும் பொது உடைமை முறையால் தீர்ந்துவிடும் என்றும், ஆகவே அதை எந்த வகையாலேனும் (புரட்சிகள் செய்தேனும்) உலகம் முழுவதும் நடைமுறைக்குக் கொண்டு வந்து விடவேண்டு மென்றும் தோன்றலாம்.

மக்களில் ஒரு சாரார் பசியும் பிணியும் இன்றி, கல்வியிலும் கலையிலும் சிறந்து விளங்குவதற்கும் மற்றொரு சாரார் பசியும் பிணியும் கொண்டு கந்தையும் நிழலுங் கூட இன்றிக் கருகுவதற்கும் அதனால் இரு சாரார்க்குள்ளும் பொறாமையும் பகையும் வளர்வதற்கும் காரணம் செல்வ முடைமையும் செல்வ மின்மையுமே என்றும், எனவே செல்வத்தை எல்லாம் தனி உடைமையினின்று பிரித்துப் பொதுவுடைமையாக்கி விட்டால் மக்களனைவரும் சமமாக ஊணும் உடையும் உறையுளும் பெற்றுப் பொறாமையும் பொச்சரிப்பும் இன்றி இனிது வாழ்வர் என்றும் பொது வுடைமை வாதிகள் கூறுகின்றனர். இது ஒரு வகையில் பொருத்தமாகவும், கேட்பதற்கு மகிழ்ச்சி தருவதாகவுமே இருக்கிறது. சமய வாதிகள் கூறும் தேவலோகத்தையே இந்நில வுலகத்தில் காணலாம் என்றும் தோன்றுகிறது.

மற்றொரு சாரார் மக்களின் அல்லல்கள் எல்லாவற்றிற்கும் காரணம் யான் எனது என்னும் அகப் புறப் பற்றுகளும் அவற்றால் வரும் அறியாமையுமே என்றும், ஆகவே அவற்றை விட்டு விட்டால் அல்லல்கள் தொலையுமென்றும் அதற்காகப் பற்றற்றான் பற்றினைப் பற்றவேண்டும் என்றும் பிறவாறும் கூறுகின்றனர்.

பொதுவுடைமை வாதிகள் இவ் வகப் புறப் பற்றுக்களில்

எனது என்னும் புறப்பற்றை, அதாவது உடைமைகளை எல்லாம் பொதுவாக்குவதன் மூலம் அகற்றுகின்றனர். அகற்றிவிடவும் கூடும். ஆனால் யான் என்னும் அகப்பற்று அதன் தொடர்பான உள்ளுணர்ச்சிகளும், பொருளல்லாத வேறு உடம்பு உயிர் இச்சைகளும் மனித இனம் இருக்கும்வரை இருந்து கொண்டு தம் தீய விளைவுகளை வெளிப் படுத்தாமல் இருக்குமா? அதற்கு இப்பொழுது உடைமை முறையால் ஏதேனும் வழி செய்யமுடியுமா? உரிமை என்பது என்ன? வேட்கைகளும் முயற்சிகளும் மக்கள் எல்லோருக்கும் ஒரே மாதிரியாக இருக்குமா? அவற்றை ஒரு கட்டுப் பாட்டுக்குள் அடக்கமுடியுமா? அடக்கலாமா? உடைமைத் தொடர்பு இல்லை என்றால் மக்களுக்குள் உறவும்' உரிய பிணைப்பும் (பாசமும்) சரிவர இருக்குமா? என்பன போன்ற ஐயங்களைப் பொது உடைமை வாதிகள் போக்குவதற்கு முயற்சி செய்யுங் கடமையுடையவர்.

உணவு, உடை, உறையுள் மற்றும் பல நுகர் பொருள்கள் இவைகளால் மட்டும் நிறைவு பெறுவதன்று மனித உள்ளம். அது அறிவு, ஆராய்ச்சி, காவியம், ஓவியம், சிற்பம், இசை, நாடகம், கவிதை முதலிய பல கலைகளையும் அவற்றோடு நில்லாமல், அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை முதலிய அருங்குணங்களையும் அருளையும் நாடி நிற்பது; இந் நாட்டங்களை முதன்மையாகக் கொண்ட நெஞ்சம் ஊண், உடை முதலிய உடைமைகளால் வரும் வசதிகளைப் பெரும்பாலும் கருதுவது கூட இல்லை. கலைச்சிறப்பும் குணமாட்சியும் நிறைந்த இடத்திலே இழிந்த பொருட் போராட்டத்துக்குக் காரணம் ஏது?

என்றாலும், அறிவு, ஆராய்ச்சி, கலை, அருள் துறைகளில் சிறக்க நிற்பார்க்கும், முயற்சியில் மிக்கார்க்கும் பொருள்வசதி நிரம்ப வேண்டாமா? அவற்றுள் ஊக்கந் தரப் புகழ் ஒன்றேபோதுமா? அன்பர்கள் இவைபற்றியெல்லாம் விளக்கங்கள் எழுதியனுப்பலாம். அடுத்த இதழ் 'முல்லைக் கொடியில்' இதுபற்றி மேலும் ஆராயலாம்.

—ஆடலரசு.

---

## 'முல்லைக் கொடி' நேயர்க்கு

5-10-51– லிருந்து 'முல்லைக் கொடி'யின் புதிய ஆண்டு (4-ம் கிளை) தொடங்கி நடந்துவருகிறது

சென்ற ஆண்டுக்குக் கையொப்பம் எந்த மாதம் அனுப்பியிருந்தாலும், சென்ற ஆண்டுடன் அது முடிவெய்தும். இதழ்கள் சேராமல் குறையிருந்தால் அன்பர்கள் அவற்றைத் தெரிவித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆகவே, இந்தப் புதிய ஆண்டுக்குப் புதுக் கையொப்பம் அனுப்பி வைக்க வேண்டும். இதுவரையில் அனுப்பாமலிருக்கும் அன்பர்கள், அன்பு கூர்ந்து, விரைவில் அனுப்பி வைப்பார்களாக!

செய்தியாளர்.

## குருகுலத்துக்கு - - - வாழ்த்து

திருவள்ளுவர் உலகப் பெரியார். உலகத்துக்கு ஒருவர் கடவுள் என்பதுபோல் இவரும் ஒருவர். அதனால், இவருக்கும் 'தேவர்' என்று பெயருண்டு, ஆகவே, திருவள்ளுவர் வாக்கு. தேவ வாக்கு.

கடவுள் எல்லார்க்கும் பொதுவானவர். திருவள்ளுவரும் எல்லார்க்கும் பொதுவான வாழ்க்கை வேதம் அருளிச் செய்திருக்கின்றார்.

சாதி மதம் நாடு மொழி நிறம் முதலிய எவ்வகை வேற்றுமையும் கடந்து, எவ்வகைப் பற்றும் இன்றி, எவ்வகைச் சார்புந் தொடராமல், தூய உண்மையளவாக வாழ்க்கையைக் கடைப் பிடிக்க முந்தும் உண்மையாளர்க்குத் திருவள்ளுவர் ஒருவரே உலகுக்கு வழி காட்டி!

உலகத் தலைவர்கள் மனமாரப் பின்பற்றும் பெருங் குரவராய் உயர்ந்து நின்றவர், எல்லாக் காலத்திலும் திருவள்ளுவர் ஒருவரே!

மாம்பாக்கம் குருகுலம் தெய்வத் திருவள்ளுவரின் ஆதீனம்! அதனால், அது, உலகு முழுவதும் இணங்கிப் பணிபுரிந்து நலம் பெறும் சிறப்பு வாய்ந்தது! குருகுலப் பணியாளர் இக் காரணங்களால் உலகப் பணியாளராய் உயர்கின்றனர்.

'மன்பதைப் பணி அலுவலகம்' 'உலகோர் யாத்திரைத் தலம்' 'உலக குருபீடம்' என்பது, குருகுலத்துக்கு நன்கு பொருந்தும்படி, ஆதிகுரு திருவள்ளுவரும் ஆதிபகவனும் அருள் புரிவாராக!

—குருகுலத்தார்
கூட்டு வழிபாட்டுக் குரல்!

# சிலப்பதிகாரம்

## 13. கண்ணகி கண்ட கன

முத்துசாமி'

மாலதி யென்ஞெரு பார்ப் பனி மேலோர் நாள் தன் மாற்ருள் குழந்தைக்குப் பாலூட்ட அது விக்கிக்கொண்டி றந்தது. மேல் வரந்தரு காதை யில் குழவி இறந்ததனைக் கூறு மிடத்து "பால்சுரந் தூட்டப் பழவினை யுருத்துக் கூற்றுயிர் கொள்ள" என்று ஆசிரியர் கூறுவதால், பழவினை அந் நேரத் தில் தாக்க அக்குழவி யிறந்த தென்று தெரிகிறது. கணவ னும் குழந்தையின் தாயும் கண் டால் தானே கொன்றுவிட்ட தாக அடாத பழி சாற்றுவர் என்று அஞ்சி, அக் குழவியினை யெடுத்துக் கொண்டு கற்பகக் கோட்டம் முதலான பல கோட்டங்களுக்கும் சென்று முறையிட்டனள்.

அவள் இன்னின்ன கோட் டங்களிற் சென்று முறையிட் டாள் என்று ஆசிரியர் கூறுவன வற்றிலிருந்து பூம்புகாரிலிருந்த பல கோட்டங்களின் பெயர்கள் தெரிகின்றன. அவையாவன: கற்பகத் தருக் கோட்டம், வெள் யானைக் கோட்டம், வெள்ளை நாகர் (பல தேவர்) கோட்டம், உச்சிக் கிழான் (சூரியன்) கோட் டம், ஊர்க்கோட்டம், வேற் கோட்டம், வச்சிரக் கோட்டம் புறம்பணையான் (சாதவாகனன்) கோட்டம், நிக்கந்தன் (அருகன் கோட்டம், நிலாக் கோட்டம் என்பன.

பலதேவன் வெண்ணிற உடம்புடையவனுதலால் அவன் கோட்டத்தை வெள்ளை நாகர் கொட்டம் என்றனர். மேற் கூறிய கோட்டங்கள் இக் காலத் தில் எங்கும் இருப்பனவாகத் தெரியவில்லை. திருநெல்வேலிக் கருகில் பொருநையாற்றங்கரை யில் வெள்ளைக்கோயில் என்று ஒரு இடம் உள்ளது. அங்கே இப்பொழுது சுடுகாடு இருக்கின் றது. இன்றும் வெள்ளைக் கோயில் என்றுதான் அதனை மக்கள் அழைக்கின்றனர். ஒரு காலத்தில் பல தேவர் கோயில் அங்கு இருந்திருக்கலா மென் றும் அதனுல் அவ்விடம் வெள் ளைக் கோயில் என்று பெயர் பெற்று வழங்கி வந்திருக்க வேண்டுமென்னும் பேராசிரியர் சேதுப் பிள்ளையவர்கள் ஒரு சமையம் கூறினர். வேறு எங்கும் மேற் கூறப்பட்ட கோட்டங் களில் ஒன்றேனும் இருப்பதாகத் தெரியவில்லை.

முன் இந்திர விழவூரெடுத்த காதையில் 'அறுமுகச் செவ் வேள் அணிதிகழ் கோயில்' என்று முருகன் கோயிலைக் குறிப்பிட்டிருப்பதால், மேற் கூறப் பட்ட வேற் கோட்டம் என்பது வேலை மட்டும் வைத்து வணங்கும் இடமாக இருத்தல் வேண்டும். வேலை மட்டுமே வைத்து வழிபாடு செய்யும் வழக்கம் இன்றும் உண்டு.

கோட்டம் என்பது சிறிய கோயில். கோயில் என்பது பேரிய கோயில். இந்திரவிழ வூரெடுத்த காதையில் பிறவா யாக்கைப் பெரியோன் கோயில் முதலாகச் சொல்லப்பட்ட வற்றைக் கோயில் என்றும் மேற் போந்தவற்றைக் கொட்டம் என் றும் கூறியிருப்பது காண்க. இக்காலத்திலும் கந்த கோட் டம் குமர கோட்டம் முதலான இடங்கள் சிறிய கோயிலாக இருப்பதும் அறிக.

மாலதி அவ்வாறு முறையிட் டும் அவள் முறையீடு எங்கும் கேட்கப்படவில்லை. இறுதியில் சாத்தன் கோயிலுக்குச் சென்று முறையிட்டாள். அப்பொழுது இடாகினிப் பேய் ஒரு பெண் ணுருக் கொண்டு வந்து "செய் தவ மில்லோர்க்குத் தேவர் வரங்கொடார்" என்று கூறிக் குழவியைப் பறித்துக் கொண்டு போய்ச் சுடுகாட்டுச் சக்கரவாளக் கோட்டத்துக்குச் சென்று தின்று விட, மாலதி இடியே றுண்ட மஞ்ஞை போல ஏங்கி யழுது அரற்றினுள். அப் பொழுது சாத்தன் என்னும் தெய்வம் "அன்னையே, வருந் தாதே; நீ செல்லும் வழியில் ஒரு மாச் செறிவின் நீழலில், குழவியை உயிருடன் காண் பாய்" என்று கூறித் தானே குழவியுருக் கொண்டு ஆங்குக் கிடந்தனன். மாலதி குழவியை எடுத்துக்கொண்டு போய்த் தாயி டம் கொடுத்தனள். குழவி வடிவாய அத் தெய்வச் சாத்த னும் வளர்ந்து கல்வி கேள்வி களிற் சிறந்து விளங்கி, தேவந்தி யென்பாளை மணந்து கொண்ட னன், தாய்தந்தையார் இறந்த பின் ஒரு நாள் மனைவிக்குத் தன் மூவாத 'இளநலம்' காட்டி "எம் கோட்டத்துக்கு வா" என்று சொல்லி நீங்கினன். அவளும் கணவனை யடையும் பொருட்டுச் சாத்தன் கோவிலை வழிபாடு

செய்தலை வழக்கமாகக் கொண்டாள்.

அத் தேவந்தியே கண்ணகியின் ஆருயிர்த் தோழியாவாள். அவள் வழக்கம்போல ஒரு நாள் மாலை சாத்தன் கோவிலுக்குச் சென்று கண்ணகியும் தன் கணவனைப் பெற வேண்டுமென்று, அறுகு நெல் முதலியவற்றைத் தூவித் துதித்து கண்ணகிபாற் சென்று "நின் கணவனைப் பெறுக" என்று வாழ்த்தினள்.

அந்த மாலை நோத்தைக் குறிப்பிடுகையில் ஆசிரியர்.

"அகனக ரெல்லாம்
அரும்பவிழ் முல்லை
நிகர்மலர் நெல்லொடு
தூஉய்ப் பகல்மாய்ந்த
மாலை மணிவிளக்கங் காட்டி
இரவிற்கோர்
கோலங் கொடியிடையார்
தாங்கொள்ள......"

என்று கூறுவதால் இளம் பெண்கள் மாலை நோத்தில் தங்கள் மனைகளில் அழகிய திருவிளக்கேற்றி நெல் முல்லை முதலியவற்றைத் தூவி வழி பாடாற்றும் வழக்கம் நம் நாட்டில் பண்டு தொட்டு இருந்து வருவதை அறியலாம்.

அவ்வாறு வாழ்த்திய ஆருயிர்த் தோழியை நோக்கிக் கண்ணகி "நீ வாழ்த்தியபடி என் கணவனை அடையப் பெறுவேனாயினும் நான் கண்ட ஒரு கனா அதனை ஐயுறச் செய்கின்றது. அதாவது: என் கணவன் என்னைப் பற்றி அழைத்துப் போக ஒரு பெரும் பதியுட் பட்டோம். அந் நகரத்தில் கேட்கத் தகாத ஒரு பெரும் பழியினை இடு தேளிடுமாறு போல இட்டனர். அதனால் கோவலனுக்கு ஒரு தீங்குற்றதென்று கேட்டு அரசன் முன்னர்ப் போய் வழக்குரைத்தேன். அதன் பின் அரசனுக்கும் ஊருக்கும் உற்ற தீங்கும் ஒன்று உண்டு. அது தீய கனவாதலால் மேலும் சொல்ல நான் விரும்பவில்லை." என்றனள்.

தேவந்தி, "கண்ணகி! நீ நின் கணவனால் வெறுக்கப்பட்டுப் பிரிந்திருப்பதாக எண்ணி வருந்திக் கொண்டிருக்கிறாய். அவன் உன்னை வெறுக்க வில்லை. முற்பிறப்பிலே நீ நின் கணவன் பொருட்டுக் காக்கவேண்டியதொரு நோன்பு தப்பினாய்; அதனால்தான் பிரிய நேர்ந்தது. அத் தீங்கு நீங்கக் காவிரியின் சங்கமுகத்துக்கு அருகே கடற்கானற் சோலையிலுள்ள சோமகுண்டம் சூரிய குண்டம் என்னும் இரு பொய்கைகளிலும் மூழ்கிக் காமவேள் கோட்டம் சென்று தொழுபவர் இம்மையில் கணவரோடு கூடி இன்புறுவதோடு மறு பிறப்பில் போக பூமியிலும் போய்ப் பிறப்பார். ஆதலால் நாமும் ஒரு நாள் போகலாம்" என்றனள்.

அதற்குக் கண்ணகி, "கணவனையன்றி வேறு தெய்வங்களை வழிபடுதல் நமக்குப் பீடு அன்று (பீடு—இயல்பு, பெருமை) என்று மறுத்து விட்டாள்.

கற்புடைய மகளிர் கணவனையன்றிப் பிற தெய்வம் வணங்காமை "தெய்வந்தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யு மழை" என்ற குறளாலும் அறியலாம். கற்புடை மகளிர் கடவுள் வணக்கமின்றிக் கணவனை மட்டுமே வழிபட்டு ஒழுகும் இயல்புடையவர்கள் என்பது இக் குறளின் பொருளெனப் பலர் கருதுகின்றனர் அவ்வாறாயின் திலகவதியாரின் பெற்றோர்கள் கலிப்பகையாருக்குத் தன்னை மணம்செய்து கொடுப்பதாக நிச்சயித்த பொழுதே அவரைக் கணவராகக் கொண்டவராதலால் அவர் இறந்தபின்னும் அவரையே நினைத்து வழிபாடாற்றாமல் முழுமுதற் கடவுளாகிய சிவனை வழிபட்டு வந்ததன் காரணம் என்ன? மங்கையர்க்கரசியார் தன் கணவன் வழியில் நின்று சமண் சமயத் தொழாமல் சைவசமயத்தில் நின்று சிவனை வழிபட்டதென்னை! இவ்விருவரும் சிவனை வழிபட்டாராயினும் கணவரை மறந்தாரல்லர். ஆகவே, தெய்வந் தொழாமல் கணவனை மட்டும் தொழு


PHONE 55034 TEL. ENKAYAM
கைத்தறி ஆடைகளில் சிறந்தது எங்கள் கிசான் டிரேட்மார்க்




பட்டாடைகளுக்கும் நூலாடைகளுக்கும் சிறந்த இடம்
கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
53, கிடங்குதெரு சென்னை 1.

தொழுகும் கற்புடைய மகளிர் ஒருசாரார். முழுமுதற் றெய்வத்தையும் வணங்கி அதனோடு மட்டும் நில்லாது காரைக்காலம்மையாரைப்போலக் கணவரையும் கூடிப் பணிவிடை முதலான செய்து ஒழுகும் மகளிர் இன்னொரு சாரார். முன்னையோர் கற்பெனும் திண்மையுள்ளமையால் தேவர்களை ஏவல் கொள்ளும் பெற்றியுடையவர். மழை பெய்யென்றால் பெய்யும்; தீ பற்று என்றால் பற்றிக் கொள்ளும். பின்னையோர் கற்பென்னும் திண்மையோடு இறைவன் அருளும் உடையவராதலால் தேவர்களை ஏவல்கொள்ளும் தகுதிக்கும் மேலான தானவீடுபேற் றின்பத்திற்கும் உரியவர். காரைக்காலம்மையார் இறைவனால் 'அம்மையே' என்று அழைக்கப்படும் தகுதியில் உயர்ந்தவர். திருவாலங்காட்டில் அவர் நடனம் கண்குளிரக் கண்டவர். ஆகவே இக் குறளுக்கு, முழுமுதற் கடவுள் வணக்கத்தை விட்டுக் கணவனை மட்டும் வழிபடுதல் கற்புடை மகளிர் இயல்பு என்று பொருள் கொள்வது எவ்வாற்றானும் பொருந்துவதாகத் தெரியவில்லை. இனி, தெய்வம் என்னும் சொல்லுக்குப் பிற தெய்வம் அதாவது முழுமுதற் கடவுளைத் தவிர்த்த ஏனைய தேவர்கள் என்று பொருள் கொண்டு 'அவர்களை வணங்காமல்' என்று பொருள் பகர்வாரும் உண்டு. அஃது பொருந்துவதே. இனி யொருசாரார், மழை பெய் யென்றால் பெய்வது போன்ற நிகழ்ச்சிகளை எட்டிலே புராணங்களிலன்றிக் கண்கூடாகக் காணப் பெறுமையால் அஃதன்று உரை; கணவனைமட்டும் தொழுதெழும் வழக்கமுடைய பெண் 'பெய்' யென்ற ஒலியுடன் பெய்யும் மழைக்கு நிகரென்பர், இவ்வுரை ஆசிரியர் கருத்தோடு ஒத்த இயல்பான உரையன்று. ஆசிரியர் திருவள்ளுவர் 'கற்பெனும் திண்மை' யென்று பிறிதோரிடத்திற் கூறுவதால் கற்புக்குத் திண்மைப் பண்பு உண்டென்று தெரிகிறது. அதனால், தேவர்களை ஏவல் கொள்ளும் சக்தி யுண்டு என்பது, இக் காலத்தில் கண்கூடாகக் காணமுடியவில்லையாயினும் முன்வரலாறுகளாலும், மேல் 'வஞ்சின மாலை' யில் கண்ணகி அங்கியங்கடவுளுக்குக் கட்டளை யிடுவதாலும் உணரப்படும்.

கண்ணகி பிறதெய்வங்களை வழிபடாமல் கணவனைமட்டும் வழிபடும் வழக்கமுடையவள் என்பது காமவேள் கோட்டத்துக்குச் சென்று வழிபடுவதனைப் 'பீடன்று' என்று மறுத்தமையால் தெரிகிறது.

மாதவியைப் பிரிந்த கோவலன் கண்ணகியின் மேனியைக் கண்டு வருந்தி "வஞ்சம் பொருந்திய கணிகைப் பெண்ணாகிய மாதவியோடு கூடியொழுகியதால் நம் குலத்து மலை போன்ற பெருஞ் செல்வமனைத்தும் தொலைந்தது. இவ் வறுமையைக் கண்டு நாணமடைகிறேன்" என்றான்.

கோவலன் அவ்வாறு கூறியதை மாதவிக்குக் கொடுக்க இன்னும் பொருள் இல்லையே யென்று வருந்திக் கூறியதாக எண்ணி "இன்னும் சிலம்பு இரண்டுள, கொண்மின்" என்றனள்.

கணவன் கருத்துவழி நடப்பதே தன்கடமை யென்ற ஒழுக்கத்தையுடையவளாதலால் இரண்டு சிலம்புகளைத்தவிர ஏனைய பெருஞ் செல்வமனைத்தும் தொலைந்து விட்ட காலையும் பின்னும் பொருளில்லையே யென்று கணவன் வருந்துவதை யாற்றாளாய் அவ்விரு சிலம்புகளையும் கொடுக்க முற்பட்டாள். வேறொரு பெண்பால் மனம் வைத்துத் தீயவழியில் பொருளனைத்தையும் கணவன் செலவு செய்து விட்டது குறித்து அவனை இகழவில்லை. வேறு 'சாதாரணப்' பெண்கள் அத்தகைய நிலையிலிருப்பின் "இங்கே கட்டிய மனைவி கதறி யழுது கொண்டிருக்கக் கணிகைப் பெண்பால் மனம் வைத்தனை. முன்னோர் தேடித் தந்த மலைபோன்ற செல்வமெல்லாம் தொலைந்து வறுமையுறச் செய்தாய். இன்னும் பொருளில்லையே யென்று ஏங்குகிறாய். உன்மீது இரக்கங் காட்டுவது மாபாவம். உன் முகத்தில் விழிப்பது இன்னும் கொடிய பாவம். என்னை விட்டுத் தொலைந்துபோ" என்று சீறி விழுவரன்றோ? கண்ணகி சிறிதும் மனம் மாறுபடாமல் 'இன்னும் இரண்டு சிலம்புள' என்று கூறியது எவ்வளவு மேன்மையான பண்பு!

கோவலன் "இச் சிலம்பு முதலாகக் கொண்டு மதுரையம் பதி சென்று வாணிபம் செய்து இழந்த பொருளனைத்தையும் பெறுவேன்; நீயும் வா" என்று கூறி அன்றிரவே அவளோடும் மதுரைக்குப் புறப் பட்டனன். அவ்வாறு மதுரைக்குச் செல்லுதல் முன் வினையின் உந்துதலால் என்று நினைவூட்டுவார் 'தீவினை கடைக்கூட்ட வியங் கொண்டான் கங்குல் கனைசுடர் கால்சியா முன்' என்றார். (வியம்—ஏவல்)

---

## சிந்திய கருத்துக்கள்

(பெரிய புராண விரிவுரையில்)

'மயிலை ந. இராமலிங்கம்'

1. சான்றோர் திருவடியில் அவர் சக்தி ஆற்றல் மிகுந்திருக்கும். அருட்சக்திகள் நம்மேல் ஏற அவர் திருவடியில் வீழ்ந்து வணங்க வேண்டும். தலைக்கு அருட்சக்தியை வாங்கும் சக்தி உண்டு. வாங்கப் பயன் படும் பொழுது தலை, சென்னி என்று பெயர் பெறுகிறது.

2. நடக்கும்பொழுது, பிற உயிர்கள் துன்பம் உறுமலிருக்கவும், உயர்ந்த பிறவியின் சான்றாகவும், மனிதர்க்குப் பாதங்கள் மெத்தென்று அமைந்திருக்கின்றன. சமணர் தாம் நடக்கும் பொழுது பிற உயிர் துன்புறு வண்ணம் பீலி கொண்டு விலக்கி நடப்பார்கள். ஆதலின் மக்கள், சிறப்பாகப் பெண்கள், மெத்தென்று நடத்தல் நல்லது.

3. பார்த்தவுடன் யாரென்று கேட்காது அவரோடு அளவளாவி அவர் யாரென்று தெரிந்து கொள்ளுதலே நாகரிகம்.

4. நாம் செய்யும் தவறுகளை எண்ணிக் கடிந்து ஒதுக்கித் திருந்திப் பிறர்க்கென வாழும் நிலையே, பிறரையும் திருந்தச் செய்யும். நாம் அதிகாரம் செலுத்தித் திருந்த வைப்பது தகுதியன்று.

5. சான்றோர் தெய்வ உருவமும் நாமமும், உள்ளுணர்வில் ஆழ்தலுக்குக் கருவியாய் இருப்பன. ஆதலின் உருவமழிந்து நாமமழிந்து சான்றோர் திறத்திலும் தெய்வ அருளாற்றலிலும் ஆழ்ந்தால் தெளிவு உண்டாம். தெளிவில் அடக்கம் உண்டாகும்.

6. தன்னைத் தலைவனாக எண்ணும் யாவருக்கும் இறுதி உண்டு என்பதைச் செம்மாப்பு இறுமாப்பு என்ற சொற்களே தெரிவிக்கின்றன.

7. தன் தலைவனை உணராதவர் தெளிவற்றவர். என்ன திறம் படைத்திருப்பினும் தன் தலைவனை அறியாதவர் இழிந்தவரே. அவர்க்கு உதவி செய்யலாம். அவருடன் இணக்கம் கூடாது.

8. உயர்ந்தோர்க்குச் சாதி இல்லை. சாதியில் இருப்பவர் தாழ்ந்தோர். சாதி என்பதே இழிவாகும்.

9: பாடி வணங்குதல் சிறப்பு; தெரியாவிட்டால் பாடுவதைக் கேட்டு வணங்க வேண்டும்.

10. நல்ல நாதம் கேட்பதில் ஆகாசப் பாகமான நடு நாடி செழிப்படையும்.

11. நாம் உலகில் பிறர் உதவியில் வளர்ந்து வருகிறோம். ஆயினும் நம் மூல மலங்களை அழித்து உயிரைப் புனிதப்படுத்தும் செயல் ஆசிரியர் உதவியினால்தான் முடியும். ஆதலின் அவரிடம் 'தீக்கை' பெற வேண்டும். தீக்கை, இனிமேல் செய்கின்ற வினையை எழாமல் செய்யும்; இருக்கின்ற வினையைத் துடைக்கும்; இந்தப் பிறவி வினையின் வலிமையையும் குறைக்கும்.

## குருகுல வளர்ச்சி:

### முல்லைக்கொடியும் பயனும்:

குருகுலத்தின் கிளர்ச்சித்தாள் முல்லைக் கொடி. தொடக்கத்தில் அது பெரும் பாலும் குருகுல மாணவரின் எழுத் தாற்றலைப் பெருக்கும் நோக்கத்தோடேயே ஆசிரியர் அவர்களால் தொடங்கப் பெற்றது. அந் நோக்கம் ஓரளவு வெற்றி பெற்று விட்டது என்றே சொல்லலாம். இப்போது மாணவர்களிற்சிலர் ஆழமாகவும் அழகாகவும் கட்டுரைகள் எழுது கின்றனர். நயமாகவும், நன்முறையிலும் மாறுபட்ட கருத்துக்கள் மேல் தம் கருத்துக்களைக் குறிப்பிடுகின்றனர். உண்மையிலேயே இது ஒரு பெரிய வளர்ச்சி. இனி, இது குருகுலத்தின் கொள்கைப்படி நாட்டில் நடைபெறும் ஆக்கச் செயல்களுக்கெல்லாம் ஊக்க மூட்டியும், மொழிகலை தொழிலருள் பணி என்னும் ஐவகைத் திறமைகளில் அடக்கி நடைபெற வேண்டிய ஆக்கச் செயல்களை எல்லாம் சுட்டிக்காட்டியும், நடு நிலையான முறையில் நாட்டு நடப்புகளின் மேல் நயமாகத் தன்னுடைய கருத்துக்களைத் தெரிவித்தும் வரவேண்டுவது என்பது ஆசிரியர் கருத்து. அதோடு இது போன்ற ஒரு இதழ், கிழமை இதழ், நல்ல தமிழ் இதழ் நாட்டில் இல்லையாதலின் இத் தகுதிகளைப் பலரும் அறியுமாறும், இதழ் எங்கும் பரவுமாறும் செய்யவேண்டியது அன்பர்கள் கடமை.

---

## மாதர் அருள் முயற்சி

"மதி"

நாயன்மார், ஆழ்வார் காலத்தில் பெண் கல்வி தமிழ் நாட்டில் சிறப்புற்றிருந்ததென்று தெரிய வருகிறது. அதற்குக் காரைக்கால் அம்மையாரும், ஆண்டாள் அம்மையாரும் பாடிய அருட் பாடல்களே சான்ருக விளங்குகின்றன. அவர்கள் ஆண்டவன் மேல் அவ்வளவு அன்பு கொண்டு பாடி உள்ளார்கள். ஆண்டவனுக்கு வேண்டற்பாலது அறிவின் பயனுகிய அன்பே. காரைக்காலம்மையாரினதும், ஆண்டாள் அம்மையாரினதும் அன்பு நிலையை என்னென்று கூறுவோம்! முன்னெல்லாம் அத்தகைய அன்புக் கல்விப் பெண் மணிகளைப் பெற்றது நந் தமிழ் நாடு!

அப் பெரியோர்கள் ஆண்டவன் பால் அன்பு கொண்டு அருள் நெறியை அகில மக்களுக்கு அறிவித்து ஆண்டவனை அடைந்தார்கள். அவர்களைப் பின் பற்றி மாதர்களாகிய நாமும் ஆண்டவன் அருளைப் பெற ஆடவர்களின் மனமறிந்தும் இடத்திற் கேற்றபடி அவர்களிடம் தகுதியாகவும் அன்பாகவும் ஒழுகி, மாதர் சங்கங்களுக்கும், சன்மார்க்க விரிவுரைகளுக்கும், திருத்தலங்களுக்கும் செல்ல அவர்களிடம் விடை பெற்றுக் கொள்ள வேண்டும். பாடுந் திறனுடைய பாவைமார் பக்திப் பாடல்களைப் பாடிப் பரந்தாமனின் பாமானந்தத்தைப் பருகலாம். ஆர்வமுடையவர்கள் மாதர் இசை வகுப்புகளிலும் கலந்து கொள்ள வேண்டும்.

அடியார் பால் அன்பு செலுத்தினுல் தான் ஆண்டவனை அடைய முடியும். ஆகவே நாம் எல்லோரிடம் எந்தக் காரணத்தைக் கருதியும் கடிந்து பேசாமல் அன்போடு பேசவேண்டும். அவ்வாறு அன்பின்றி இருந்தால் பிறவி எடுத்தும் உயிரில்லா உடம்பின் (பிண) நிலையை அடைவோம்.

"அன்பின் வழியது உயிர்நிலை அஃ திலார்க்கு என்புதோல் போர்த்த உடம்பு".

அன்பின் வழியில் இயங்கும் உடம்பே உயிர்நின்ற உடம்பாகும்; அன்பு இல்லாதவர்க்கு உள்ள உடம்பு எலும்பைத் தோல் போர்த்த வெற்றுடம்பே ஆகும். ஆகவே நாம் சிறிது சிறிதாக அன்பின் சின்னமாக மாறிப் பிறவியின் பயனை அடைவோமாக!

## பொங்குக பொங்கல்.

அன்புத் தொண்டர் அகமதில் வதியும்
இன்பத் தனிமுதல் இறைவன் அருளில்
கோன்முறை ஓச்சும் கொற்றவன் அறத்தால்
வான்மழை பொழிந்து வளம்பல வகையுடன்
செந்நெல் செழிக்கச் செய்தொழில் பலவும்
இன்னல் இன்றியே எங்கும் மலிந்திட
செந்தமிழ்க் கலையால் செவ்விய பண்பும்
பைந்துணர் வதனுல் பக்திச் சமயமும்
வாழ்வெலாம் நாட்டில் வேள்விக் கெனவே
தாழ்விலாத் தியாகிகள் தம்செயல் ஓங்கிட
கன்றும் ஆவும் கனிந்துற வதுபோல்
ஒன்றும் உளத்தால் உலகுடன் கலந்தும்
இத்தலத் துன்பம் எத்துணை வரினும்
கைத்தலம் பற்றிக் கனிமுகம் காட்டும்
மனையறம் காக்கும் மாண்புறு மனையுடன்
துணையதாய்ச் செய்யும் தூயநற் பொங்கல்
ஆட்சிமை யாளரும் அகமுகத் தவத்தரும்
மாட்சிமை கொண்டே மன்பதை உயர்த்தும்
நலமுள பணியால் நனிசிறந் திடவே
பொலிவுற விளங்கி பொங்குக பொங்கல்!
மங்குக மருளால் மனத்துறு தீமைகள்
பொங்குக பொங்கல்! பொங்குக பொங்கல்!

தி. நாகப்பன்.

நஞ்சன்கூடு பல்பொடி.
பாக்டெரியாரின்


யுனைடெட் கன்ஸர்ன்,
54, பந்தர் தெரு, :: சென்னை-1

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்: தி. சு. பாலசுந்தரம்; குருகுல அச்சகம் மாம்பாக்கம்; மதுராந்தகம். (அஞ்.)